**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.93/2024**

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 25–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.2–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **ராமகிருஷ்ணன்** | **தொழில்** | : | |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : | |
| **முகவரி** | : | | **மதம்** | : | |
| **ஜாதி** | : | | **வயது** | : | |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 3 ஆம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 05.06.2003 ஆம் தேதிய முதல் பிரதிவாதி பொன்னுசாமி வகையறாவிற்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.07.2014 ஆம் தேதிய முதல் பிரதிவாதி தனது மகளான (வாதி) உமா மகேஸ்வரிக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரம்

சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.19. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.02.2026 ஆம் தேதிய ஆலம்பாடி கிராமம், சர்வே எண்.424/7 க்கு உண்டான UDR A – Register சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.20. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.02.2026 ஆம் தேதிய சர்வே எண்.424/7 ல் தவறாக ஏற்பட்ட கூட்டு பட்டாவிற்கு உண்டான சிட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.21. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.02.2026 ஆம் தேதிய பிழை திருத்தப்பட்டு சர்வே எண்.424/7 க்கு முதல் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட தனி பட்டாவிற்கு உண்டான சிட்டா சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.22. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.25 19:01:42 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.